

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 12.02.2026


# விவசாயிகள் விரோத... தொழிலாளர் விரோத..

ஒன்றிய பா.ஜ.க. அரசின் விவசாயிகள் விரோத.. தொழிலாளர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து பிப்ரவரி 12 அன்று தொழிற்சங்க அமைப்புகள் நடத்தும் வேலைநிறுத்தத்துக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

**தொழிற்சங்கங்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற வேண்டும் - விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது என்று தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

மத்திய தொழிற்சங்கங்கள், தொழில்வாரி தொழிற்சங்கங்கள், துறைவாரியான தொழிற்சங்க சம்மேளனங்கள், விவசாய அமைப்புகள் இணைந்து ஒன்றிய அரசின் விவசாயிகள் விரோத, தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத மற்றும் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து இந்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**ஒன்றிய அரசாங்கம் தன்னிச்சையாக மாநில அரசுகளை கலந்து ஆலோசிக்காமலும், தொழிற்சங்கங்களோடு முறையாக கலந்து ஆலோசிக்காமலும், நாடாளுமன்றத்தில் விவாதமின்றியே நிறைவேற்றிய நான்கு தொகுப்புச் சட்டங்களை திரும்பப் பெற வேண்டும் என்பது மிக முக்கியமான கோரிக்கை ஆகும்.**

தொழிலுறவு சட்டத் தொகுப்பு 2000, சம்பளத் தொகுப்பு 2019, பணித்தலப் பாதுகாப்பு மற்றும் பணி நிலைமைகள் சட்டத் தொகுப்பு 2020, சமூகப் பாதுகாப்பு தொகுப்பு 2020 - என்ற நான்கும் தொழிலாளர்களின் ஊதியப் பாதுகாப்பு, வேலைப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகிய மூன்றையும் கேள்விக்குறி ஆக்குகிறது. இவை மக்கள் விரோத, ஜனநாயக விரோத, சமூக விரோதச் சட்டங்கள் ஆகும்.

**தொழிலாளர்கள் 100 ஆண்டு காலமாகப் போராடிப் பெற்ற உரிமைகளை பறித்து கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் பெருநிறுவனங்களுக்கும் ஆதரவாகச் செயல்பட்டு வருகிறது பா.ஜ.க. அரசு.**

மின்சார சட்டத்தை திருத்துவதன் மூலம் உற்பத்தி பகிர்மானம் போன்றவைகள் தனியார் மயமாக்கும் அபாயம் உள்ளதை இப்போராட்டம் வலியுறுத்திச் சொல்கிறது.

மோடி அரசு மூன்று விவசாய சட்டங்களைக் கொண்டு வந்த போது நாட்டின் ஒட்டு மொத்த விவசாய சமூகமும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் போராடியது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மனமில்லாமல் அதனை திரும்பப் பெற்றார்கள். இப்போதும் ஏதாவது ஒரு வழியில் அதனை அமல்படுத்த நேரம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது பா.ஜ.க. அரசு.

**விவசாயிகளின் விளைபொருளுக்கு நியாயமான விலை வழங்குவோம் என்ற உத்தரவாதத்தை இதுவரை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறைவேற்றவில்லை. விதைகள் சட்டத்தை திருத்தம் செய்து சிறு - குறு விவசாயிகள் கைவசம் உள்ள விதைகளை அழிக்க நினைக்கிறார்கள்.**

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தை பெயர் மாற்றம் செய்ததோடு அதன் உண்மையான நோக்கத்தைச் சிதைத்துவிட்டார்கள். ஒன்றிய அரசின் பொறுப்பைத் தட்டிக் கழித்து மாநிலங்களின் நிதிச் சுமையை கூடுதலாக்கும் வகையில் இதனை மாற்றிவிட்டார்கள்.

**இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே முன்மொழியப்பட்ட இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் இந்திய விவசாயத்தை அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களுக்கு முழுவதுமாக சரணடையச் செய்வதாகும். 45 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களை அமெரிக்காவிடமிருந்து வரி இல்லாமல் இறக்குமதி செய்வது என அமெரிக்கா - இந்தியா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இந்திய இறையாண்மை, விவசாயம், பொருளாதாரத்தில் மிகப்பெரும் பாதிப்பை உண்டாக்கும்.**

கடந்த இரண்டு ஆண்டுகளில் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் திருத்தச் சட்டம், வனப் பாதுகாப்பு திருத்தச் சட்டம், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் திருத்த விதிகள் ஆகிய அனைத்தும் விவசாயிகள், பழங்குடியினருக்கு மட்டுமின்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் விரோதமானவை ஆகும். இன்சூரன்ஸ் துறையில் 100 சதவிகித அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

டங்ஸ்டன் கனிமத் தொகுதியை ஏலத்திற்கு அறிவித்தது பா.ஜ.க. அரசு. மக்கள் எதிர்ப்பு, தமிழ்நாடு அரசின் எதிர்ப்பு ஆகியவை காரணமாக அந்த ஏலத்தை திரும்பப் பெற்றார்கள்.

**அதிக ஆபத்தான அணுசக்தி உற்பத்தித் துறையில், லாப நோக்கத்துடன் செயல்படும் தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் நுழைவதற்கு மோடி அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்காக "இந்தியாவை மாற்றுவதற்கான அணுசக்தியின் நிலையான பயன்பாடு மற்றும் மேம்பாட்டுச் சட்டம் (SHANTI)" என்ற ஒன்றைக் கொண்டு வந்துள்ளது.**

வரைவு விதை மசோதா, மின்சார திருத்த மசோதா மற்றும் SHANTI சட்டம் ஆகியவற்றைத் திரும்பப் பெற வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை (MGNREGA) மீட்டெடுத்து 100 நாட்களை முழுமையாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். 'விக்ஸித் பாரத் - ரோஜ்கார் அவுர் அஜீவிகா மிஷன் (கிராமின்) சட்டம், 2025' ஐ ரத்து செய்ய வேண்டும்.

இதுபோன்ற தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோதச் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த வேலைநிறுத்தத்துக்கு தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாய அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

**பா.ஜ.க. அரசு என்பது கார்ப்பரேட்டுகளுக்காக, கார்ப்பரேட்டுகளால் ஆளப்படும் கார்ப்பரேட் அரசாங்கம். இவர்களுக்கு தொழிலாளர்களோ, உழவர்களோ, பொதுவாக மக்களோ உழைப்பை மட்டும் கொடுக்க வேண்டியவர்களே தவிர, உரிமை படைத்தவர்கள் அல்ல. மக்களின் உழைப்பை, கார்ப்பரேட்டுகளுக்கு கரன்சி ஆக்கும் ஒற்றைச் செயலை மட்டுமே ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து வருகிறது. அவர்களது அனைத்து நடவடிக்கைகளும் இதனை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே நடக்கின்றன.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.2.2026) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் இல. பத்மநாபன் அவர்களின் மகள் ப.ரஷியா – பெ.வினோத்குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ. சாமிநாதன், திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, தயாநிதிமாறன், ஈஸ்வரசாமி, திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் என். தினேஷ்குமார் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

# வெறுப்பைப் பரப்பி, பிரச்சினைகளை உருவாக்கி குளிர்காய நினைக்கும் பா.ஜ.க.!

## 'இந்தியா டுடே' கருத்தரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

**இருக்கும் ஒன்றிய அரசாலேயே, இந்த வளர்ச்சியை மறைக்க முடியவில்லை; மறுக்க முடியவில்லை!**

**தமிழ்நாட்டின் GSDP எவ்வளவு? 17 இலட்சத்து 23 ஆயிரத்து 698 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது! Percapita Income, 3 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய்! National Average கூட Compare செய்தால், இது, 1.74 மடங்கு அதிகம்!**

**தமிழ்நாடு 'டாப்'பில் உள்ளது!**

**அடுத்து, இந்தியா முழுவதும் 50 சதவிகிதம், அரசு மேல்நிலைப் பள்ளிகளில்தான் Science Lab இருக்கிறது. இதுவே தமிழ்நாட்டில் 98.3 சதவிகிதம் பள்ளிகளில் Lab இருக்கிறது! N.I.R.F. தரவரிசையில், தலைசிறந்த நூறு கல்லூரிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்லூரிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 33. Top 50, State Universitiesஇல் 10 Universities தமிழ்நாட்டில்தான் இருக்கிறது!**

**நிதி ஆயோக் வெளியிட்ட S.D.G குறி யீட்டில், 78 புள்ளிகளோடு, தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது! இப்படி, எந்த புள்ளிவிவரங்களை எடுத்துக்கொண்டாலும், தமிழ்நாடு Topஇல் இருக்கிறது! அதனால்தான், 65க்கு மேற்பட்ட ஒன்றிய அரசு விருதுகள் தமிழ்நாட்டை தேடி வருகிறது!**

**இப்படி ஏராளமான புள்ளிவிவரங்களை என்னால் பட்டியலிட முடியும்! இதையெல்லாம் சாதாரணமாக நாங்கள் சாதித்து விடவில்லை. ஏராளமான மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி, எதிர்காலத்திற்கான முதலீடுகளை செய்து, Achieve செய்திருக்கிறோம்!**

திராவிட மாடல் செயல்படுத்தும் திட்டங்களைப் பார்த்து, பல்வேறு மாநிலங்களில், அந்த திட்டங்களையும் Adopt செய்து கொள்ள வேண்டும் என்று, Case Study செய்ய Officers வருகிறார்கள். இப்போது கூட, எங்களின் தோழி விடுதியை மாடலாக எடுத்துகொண்டு. ஒன்றிய அரசு பட்ஜெட்டில் ஒரு திட்டம் அறிவித்திருக்கிறார்கள்.

### தமிழ்நாட்டிற்கு ஐ.நா. அமைப்பு விருது!

எல்லோருக்கும் தரமான மருத்துவத்தை கொண்டு சேர்க்க வேண்டும் என்று நாங்கள் உருவாக்கிய மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை ஐ.நா. அமைப்பே விருது கொடுத்து பாராட்டியிருக்கிறது! நாங்கள் செய்வது எல்லாமே முன்னோடித் திட்டங்களாக மாறியிருக்கிறது!

**ஒரு கோடியே 30 இலட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையாக வழங்குகிறோம்!**

**19 இலட்சத்து 39 ஆயிரம் குழந்தைகளுக்கு காலை உணவும், அரசுப் பள்ளிகளில் படித்து, கல்லூரிக்கு செல்லும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்திலும், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்திலும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் என்று 12 இலட்சம் பேருக்கு வழங்குகிறோம்!**

நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதும், முதல் கையெழுத்தாக விடியல் பயணத்தை அறிமுகப்படுத்தினேன். அதில், இதுவரைக்கும், பெண்கள் 880 கோடி பயணங்களும், திருநர்கள் 48 இலட்சம் பயணங்களையும், மாற்றுத்திறனாளிகள் 7 கோடி பயணங்களையும் மேற்கொண்டிருக்கிறார்கள். இதனால், அவர்களுக்கு மாதந்தோறும் 800 ரூபாய் வரை மீதமாகிறது!

### ஏராளமான திட்டங்கள்!

இப்படி,

- இல்லம் தேடிக் கல்வி
- எண்ணும் எழுத்தும்
- ஊட்டச்சத்தை உறுதிசெய்
- மக்களைத் தேடி மருத்துவம்
- இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48.
- நலன் காக்கும் ஸ்டாலின்
- பாதம் காப்போம்
- இதயம் காப்போம்
- கலைஞர் கனவு இல்லம்
- அன்புக் கரங்கள் திட்டம்
- அன்புச் சோலை திட்டம்
- தோழி விடுதி
- குறு சிறு நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாத திட்டம்
- கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்
- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்
- உங்களுடன் ஸ்டாலின்
- கலைஞர் கைவினைத் திட்டம்
- மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைத் திட்டம்
- உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு நேரடி நியமனம்
- முதலமைச்சர் கோப்பை
- அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்
- தொல்குடி திட்டம்
- டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்வழங்கும்திட்டம்
- பேராசிரியர் அன்பழகனார் கல்வி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்
- பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம்
- அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்
- முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்
- முதலமைச்சரின் கிராமசாலை மேம்பாட்டுத் திட்டம்
- கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினித் திட்டம் என்று ஏராளமான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

இவைகள் எல்லாம் மக்களிடம் பெரிய அளவில் Reach ஆகியிருக்கிறது!

### தி.மு.க. அரசு மீது மக்கள் நம்பிக்கை!

தி.மு.க. அரசு தொடர்ந்தால் தான், தமிழ்நாட்டின் எதிர்காலம் நன்றாக இருக்கும் என்று மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்கு என்றைக்கும் உண்மையாக இருக்க வேண்டும் என்றுதான் நாங்கள் உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

அதேசமயம், இவ்வளவு நன்மைகள் செய்யக்கூடிய தி.மு.க. அரசுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படியெல்லாம் நெருக்கடிகளை கொடுக்கிறது என்பதையும் மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நிதிப்பகிர்வு, வரிப்பகிர்வு, சிறப்புத் திட்டங்கள், இரயில்வே திட்டங்கள் என்று எல்லாவற்றிலும் தமிழ்நாட்டிற்கு அநீதியையும் துரோகத்தையும்தான் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஏன், இப்போது வெளியிட்ட பட்ஜெட்டில்கூட அவர்கள் தமிழ்நாட்டிற்கு செய்தது என்ன? தமிழ்நாட்டிற்கு நன்மை செய்வார்கள் என்று நம்பிதான் கோரிக்கைகள் வைக்கிறோம். ஆனால், பட்ஜெட்டில் தந்தது 'ஜீரோ'தான்! இப்போது, NDA கூட்டணிக்கு அதே ஜீரோவை மக்களும் திருப்பித் தர போகிறார்கள். மக்கள் எல்லாவற்றையும் பார்த்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

நிர்வாக ரீதியாக இந்த அளவுக்கு இடைஞ்சல்கள் கொடுப்பது, ஆளுநரை வைத்தும், அவதூறுகள் பரப்பியும், அரசியல் ரீதியாக சீண்டிப் பார்க்கிறார்கள். ஊழல் கறை படிந்த அத்தனைபேரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு, பொய்களை பரப்பி கொண்டு, தேர்தலை சந்திக்க வருகிறார்கள். இந்த ஊழல் கூட்டணிக்கு பெயர் டபுள் எஞ்சின். அந்த டப்பா எஞ்சினுடைய இலட்சணத்தை டெல்லி, உத்தர பிரதேசம், பீகார் என்று பல மாநிலங்களில் பார்த்து கொண்டு தான் இருக்கிறோமே?

### அடிமைகள் - அவதூறுகள்!

பா.ஜ.க.வைப் பொறுத்தவரைக்கும், வெறுப்பைப் பரப்பி, பிரச்சினைகளை உருவாக்கி, அதில் குளிர்காய வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

ஒரே ஒரு உதாரணத்தை சொல்கிறேன். தமிழ்நாட்டைப் போலவே, அஸ்ஸாமிலும் இப்போது தேர்தல் வரப்போகிறது. அதற்கு, அஸ்ஸாம் பி.ஜே.பி.யின் சோசியல் மீடியா பக்கங்களில் வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்கள். நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். அதில், அந்த மாநிலத்தைச் சார்ந்த ஆளும் பா.ஜ.க. முதலமைச்சர் துப்பாக்கியில் குறி வைப்பது போல போட்டிருந்தார்கள். அதுவும் யாருக்கு எதிராக? இப்படிப்பட்ட காட்சியை வைப்பதற்கான துணிச்சல் அவர்களுக்கு எங்கிருந்து வந்தது.

ஜனநாயக இந்தியாவில், இப்படியெல்லாம் நடக்கும் என்று யாராவது நினைத்துப் பார்த்திருப்போமா... இந்த நிலைமையை தான் இந்தியா முழுவதும் ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் நினைக்கி றார்கள். அதற்கு அவர்களுக்கு துணையாக இருப்பது இரண்டு விஷயம். ஒன்று, அடிமைகள் - மற்றொன்று, அவதூறுகள்.

இதையெல்லாம் பயன்படுத்தி ஜனநாயகத்தின் அத்தனை விழுமியங்களையும் ஒழித்திடவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்கு நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகள் நிச்சயம் இடம் கொடுக்கக் கூடாது. தமிழ்நாட்டிற்கு சேரவேண்டிய நிதியையும், நீதியையும் நிச்சயமாக நாங்கள் பெற்றுத் தருவோம். பா.ஜ.க.வின் பாசிச அரசியல் தமிழ்நாட்டில் நிச்சயம், நிச்சயம், நிச்சயமாக அது எடுபடாது! நிறைவேறாது!

திராவிட மாடல் 2.0வில் தமிழ்நாட்டை காத்து இந்தியாவின் நம்பர் 1 மாநிலமாக தொடர்ந்து வளர்த்தெடுப்பது நிச்சயம்!

தமிழ்நாடு வெல்லும்! இந்தியாவிற்கே வழிகாட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் அதாவது மோடி அவர்களுக்கும், ட்ரம்ப்புக்கும் இடையே ஏற்படப் போகும் வர்த்தக ஒப்பந்தத்தினால் இந்தியாவுக்கு ஏற்படப் போகும் நன்மை என்ன?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; இந்த ஒப்பந்தத்தினால் இந்தியாவுக்கே இழப்பு. இது இரு நாடுகளுக்கும் இடையே சமமான ஒப்பந்தம் அல்ல; மேடு பள்ளமானது.**

**அமெரிக்கா 18 சதவீத வரி விதிக்குமாம்; இந்தியா வரியே விதிக்கக் கூடாதாம்.**

**நீ அரிசி கொண்டு வா; நான் உமி கொண்டு வருகிறேன்; இருவரும் ஊதி ஊதி உண்ணலாம் என்பதைப் போல அல்லவா இருக்கிறது இந்த ஒப்பந்தம் !**